# அக்சயா அகாடமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி - கொசவபட்டி

**வகுப்பு: VI** **இயல் - 1 - மூதுரை** **பாடம் : தமிழ்**

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாணவர்கள் நூல்களை ------- கற்க வேண்டும்.

அ) மேலோட்டமாக ஆ) மாசுற **இ) மாசற** ஈ) மயக்கமுற

2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------

அ) இடம் + மெல்லாம் **ஆ) இடம் + எல்லாம்**

இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------

அ) மாச + அற **ஆ) மாசு + அற** இ) மாச + உற ஈ) மாசு + உற

4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

**அ) குற்றமில்லாதவர்** ஆ) குற்றம்இல்லாதவர்

இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம்அல்லாதவர்

5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---

அ) சிறப்புஉடையார் **ஆ) சிறப்புடையார்**

இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

**ஆ. குறுவினா**

**1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

(i) மன்னனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கற்றவரே சிறந்தவர்.

(ii) மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. ஆனால் கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

**இ.சிந்தனை வினா**

**1. கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.**

கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகள் :

(i) கல்லாதவர் எவராலும் மதிக்கப்பட மாட்டார். வீட்டில் பெரிய பிள்ளையாக இருந்தாலும் கற்கவில்லையெனில் பெற்றோர் அவனை ஒரு பொருட்டாக நினைக்கமாட்டார்கள்.

(ii) நன்மை தீமைகளைப் பகுத்தறிய இயலாது. எல்லோராலும் இகழப்படுவான்.

**2. கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

(i) கல்வி மனிதனை உயர்த்துகிறது. கல்வியும் செல்வமாகக் கருதத்தக்கது.

(ii) கல்வி பிறருக்குத் தந்தாலும் குறையாமல் வளரும்.

(iii) கல்வியைப் பிறரால் கைப்பற்றவோ அழிக்கவோ முடியாது.

(iv) அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்புப் பெறுவான். மன்னனையும் குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவராகக் கருதப்படுவர்.

(v) மன்னனாக இருந்தாலும் அவனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு கிடைக்கும். ஆனால் கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு கிடைக்கும்.

## 1. துன்பம் வெல்லும் கல்வி

### அ.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாணவர் பிறர்_________ நடக்கக் கூடாது.

அ) போற்றும்படி **ஆ) தூற்றும்படி** இ) பார்க் கும்படி ஈ) வியக்கும்படி

2. நாம்_________சொல்படி நடக்க வேண்டும்.

அ) இளையோர் ஆ) ஊரார் **இ) மூத்தோர்** ஈ) வழிப்போக்கர்

3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_________

அ) கையில் + பொருள் ஆ) கைப் + பொருள்

**இ) கை + பொருள்** ஈ) கைப்பு + பொருள்

4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக் கும் சொல்_________

அ) மானம்இல்லா **ஆ) மானமில்லா** இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

### ஆ.சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. மனமாற்றம் – பெற்றோர் கூறிய அறிவுரையைக் கேட்டு கந்தன் **மனமாற்றம்** அடைந்தான்.
2. ஏட்டுக் கல்வி – **ஏட்டுக் கல்வி**யுடன் தொழிற்கல்வியும் பெறுதல் சிறப்பானது.
3. நல்லவர்கள் – **நல்லவர்களுடன்** சேர்ந்து பழகுதல் இன்பம் தரும்.
4. சோம்பல் – மாணவர்கள் **சோம்பலின்றி** சுறுசுறுப்புடன் இருக்க வேண்டும்.

### இ. குறுவினா

**1. நாம் யாருடன் சேரக் கூடாது?**

நாம் தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது.

**2. எதை நம்பி வாழக் கூடாது?**

பிறருடைய உழைப்பை நம்பி வாழக்கூடாது.

**3. நாம் எவ்வாறு வாழவேண் டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?**

இந்தப் பாடலின் முதல் இரு வரிகள் நினைவூட்டும் திருக்குறள்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

**4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?**

மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழ்ந்தால், அதன் மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெறலாம்.

## ஈ.சிந்தனை வினா

**1. நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள்? ஏன்?**

நான் படித்து மாவட்ட ஆட்சியராக விரும்புகிறேன். ஏனெனில் மாவட்ட ஆட்சியரின் பணி ஒரு மாவட்டத்தையே பாதுகாக்கும் பணியாகும்.அவருடைய அனுமதியின்றி பொது இடங்களைப் பயன்படுத்த முடியாது.

எந்த அரசியல் கட்சிகளும் அவரை வழிநடத்த முடியாது. மக்கள் வாழும் இருப்பிடங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வது முதல் ஏரி, குளங்கள் போன்ற நீர் நிலைகளைத் தூர்வாருதல் வரை அவருடைய இன்றியமையாதப் பணியாகும். அரசாங்கத்தின் கீழ் உள்ள அனைத்துத் துறைகளின் குறைகளை அவர் நினைத்தால் சரி செய்ய இயலும். அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் என அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கும்.

நான் மாவட்ட ஆட்சியரானால் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர் மற்றும் செவிலியர்களை அழைத்து வாரம் ஒருமுறை அல்லது மாதம் இருமுறை நோய்களின் தன்மை குறித்தும் அவற்றிலிருந்து நாம் நம்மைப் பாதுகாப்பது குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தச் செய்வேன். பள்ளிகளில் தூய்மையாக இருப்பதின் அவசியத்தைக் கூறி பள்ளிகள் மூலம் மாணவர்களை அழைத்துக் கொண்டு சுத்தம் செய்ய வைப்பேன்.

நெகிழிப் பொருட்களைப் பற்றி விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவேன்.நிலம் கையகப்படுத்துதல், வரிப் பணம் நிலுவை, வேளாண் கடன்கள் நிலுவை இவையெல்லாம் இல்லாமல் செய்வேன்.

பஞ்சம் அல்லது தொற்று நோய்கள், இயற்கை அழிவுகளின் போது மருத்துவ முகாம் அமைத்து மக்களை நோய்கள் அணுகாமல் இருக்க வகை செய்வேன். சட்டம் ஒழுங்கு சீர்கெடாமல் பாதுகாப்பேன். இந்தியாவிலேயே என் ஆட்சியின் கீழ் உள்ள மாவட்டம் முதலிடம் பெறுவதற்கு என்னால் ஆன எல்லாப் பணிகளையும் செய்வேன்.

## 1. கல்விகண் திறந்தவர்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் ________.

அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை **ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை**

இ) வழி தெரியவில்லை ஈ) பேருந்து வச தியில்லை

2. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________.

**அ) பசி + இன்றி** ஆ) பசி + யின்றி இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி

3. படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________.

அ) படி + அறிவு **ஆ) படிப்பு + அறிவு** இ) படி + வறிவு ஈ) படிப்பு + வறிவு

4. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______________.

**அ) காட்டாறு** ஆ) காடாறு இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

**ஆ.சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

அ) வகுப்பு – **வகுப்பில்** உள்ள அனைவருடனும் அன்போடு பழக வேண்டும்.

ஆ) உயர்கல்வி – மாணவர்கள் **உயர்கல்வி** பெற்று நம் நாட்டிலேயே பணிபுரிய வேண்டும்.

இ) சீருடை – பள்ளிக்குச் **சீருடை**யில்தான் செல்ல வேண்டும்.

**இ.கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ் வின்றிப் படிக்க **சீருடை** அறிமுகப்படுத்தினார்.

2. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் **தந்தை பெரியார்.**

**ஈ. குறுவினா**

**1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?**

காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் :

(i) பொறியியல் கல்லூரிகள்

(ii) மருத்துவக் கல்லூரிகள்

(iii) கால்நடை மருத்துவக் கல்லூரிகள்

(iv) ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள்

**2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?**

காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி :

(i) தமிழகத்தில் மூடப்பட்டிருந்த ஆறாயிரம் தொடக்கப் பள்ளிகளை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.

KOSAVAPATTI KNOWLEDGE IS POWER

(ii) மாநிலம் முழுக்க அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார்.

## உ.சிறு வினா

**1. காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.**

காமராசரின் கல்விப்பணிகள் :காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப் பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார். மாநிலம் முழுவதும் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார்.

மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழவின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப்பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார்.

மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால் நடை மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர்ப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைப் புதிதாகத் தொடங்கினார். தமிழ் நாட்டில் பல கிளைநூலகங்களைத் தொடங்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசர் ஆவார்.

## ஊ.சிந்தனை வினா

**1. நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?**

**முன்னுரை:**

நான் முதலமைச்சரானால் என்ன பணிகளைச் செய்வேன் என்பதையும், என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவேன் என்பதையும் கூற விரும்புகிறேன்.

**மாணவர்களுக்குப் பயன்தரும் திட்டங்கள்:**

மாணவர்கள் சிரமமின்றி பள்ளிக்குச் சென்றுவர சிறப்புப் பேருந்துகளை இயக்க உத்தரவிடுவேன். ஏழை மாணவர்களும் உயர் கல்வி பெற உதவித்தொகை வழங்குவேன். பெண் கல்விக்கு ஊக்கமளிப்பேன்.

**மின் உற்பத்தியைப் பெருக்குவேன்:**

மின் பற்றாக்குறையைப் போக்க புதிய மின் உற்பத்தி நிலையங்கள் துவங்க உத்தரவிடுவேன். தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அனைவருக்கும் வேலைவாய்ப்பளிக்க விரைந்து செயல்படுவேன்.

**முடிவுரை:**

உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை அனைத்து மக்களும் பெற்று இன்புற்று வாழ

வழிவகை காண்பேன். கல்வி வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவேன். அனைவரும் எனக்கு ஆதரவு தர அன்புடன் வேண்டுகிறேன்.

## 1. இனயெழுத்துகள்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

அ) மஞ்சள் ஆ) வந்தான் **இ) கண்ணில்** ஈ) தம்பி

2. தவறான சொல்லை வட்டமிடுக.

அ) கண்டான் **ஆ) வென்ரான்** இ) நண்டு ஈ) வண்டு

**ஆ.பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.**

பிழை - **திருத்தம்**
தெண்றல் – **தென்றல்**
கன்டம் – **கண்டம்**
நன்ரி – **நன்றி**
மன்டபம் – **மண்டபம்**

**இ. குறுவினா**

**1. இன எழுத்துகள் என்றால் என்ன?**

சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

(i) வல்லின மெய்களுக்கு மெல்லின மெய்கள் இனம். இடையின எழுத்துகள் ஆறும் ஒரே இனம்.

(ii) உயிர்க்குறிலுக்கு உயிர்நெடிலும் உயிர் நெடிலுக்கு உயிர்க் குறிலும் இனம்.

(iii) 'ஐ' என்னும் எழுத்துக்கு 'இ' என்ற எழுத்து இனம். 'ஔ' என்னும் எழுத்துக்கு 'உ' என்ற எழுத்து இனம்.

**ஈ.தொடர்களை நீட்டித்துப் புதிய தொடர்களை உருவாக்குங்கள்.**

(எ.கா) பாடம் படித்தான்.

வகுப்பில் பாடம் படித்தான்.

தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்.

நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்.

அவன் நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான்.

**மழை பெய்தது:**

(i) புயல் மழை பெய்தது.

(ii) தொடர்ந்து புயல் மழை பெய்தது.

(iii) நேற்று தொடர்ந்து புயல் மழை பெய்தது.

(iv) சென்னையில் நேற்று தொடர்ந்து புயல் மழை பெய்தது.

**உ. இரு பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமையுங்கள்.**

(நூல், மாலை, ஆறு, படி)

(எ.கா) ஆடை தைக்க உதவுவது நூல்

மூதுரை அற நூல்.

1. **மாலை** – திருமாலுக்கு அணிவிப்பது துளசி **மாலை**.
   **மாலை** வெயில் உடலுக்கு நல்லது.
2. **ஆறு** – சுவைகள் மொத்தம் **ஆறு**.
   வைகையாற்றின் துணை**யாறு**களுள் ஒன்று மஞ்சளாறு.
3. **படி** – நூலை எடுத்துப் **படி**.
   மேலே ஏறுவதற்குப் பயன்படுவது **படி**.

**ஊ. பின்வரும் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குங்கள்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர்<br>மாணவன் | கவிதை பாடம் | எழுதுகிறார்<br>எழுதுகிறான்<br>படிக்கிறார்<br>படிக்கிறான்<br>கற்பிக்கிறார் |

(I) ஆசிரியர் கவிதை எழுதுகிறார்.

(ii) மாணவன் கவிதை எழுதுகிறான்.

(iii) ஆசிரியர் பாடம் படிக்கிறார்.

(iv) மாணவன் பாடம் படிக்கிறான்.

(v) ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்.

**எ. உரையாடலை நிறைவு செய்யுங்கள்**

மாணவர் : வணக்கம் ஐயா, தலைமை

ஆசிரியர் : வணக்கம் மதி உனக்கு என்ன வேண்டும்?

மாணவர் : எனக்கு மாற்றுச் சான்றிதழ் வேண்டும் ஐயா.

தலைமை ஆசிரியர் : எதற்காக மாற்றுச் சான்றிதழ் வேண்டும்?

மாணவர் : என் தந்தைக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது ஐயா.

தலைமை ஆசிரியர் : அப்படியா! எந்த ஊருக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது?

மாணவர் : மதுரைக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது.

தலைமை ஆசிரியர் : அங்கு எந்தப் பள்ளியில் சேரப் போகிறாய்?

மாணவர் : அங்கு அரசுப் பள்ளியில் சேரப் போகிறேன்.

தலைமை ஆசிரியர் : நீ யாரை அழைத்து வந்துள்ளாய்?

மாணவர் : என் அப்பாவை அழைத்து வந்திருக்கிறேன் ஐயா.


**ஏ.கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைவர்களின் பிறந்த நாள் எந்த நாளாகக் கொண்டாடப் படுகிறது.**

(குழந்தைகள் நாள், மாணவர் நாள், ஆசிரியர் நாள், தேசிய இளைஞர் நாள், கல்வி வளர்ச்சி நாள்)

1. காமராசர் பிறந்த நாள் **கல்வி வளர்ச்சி நாள்**
2. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் **ஆசிரியர் தினம்**
3. அப்துல்கலாம் பிறந்த நாள் **மாணவர் தினம்**
4. விவேகானந்தர் பிறந்த நாள் **தேசிய இளைஞர் தினம்**
5. ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் **குழந்தைகள் தினம்**

**ஐ. இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்ட மிடுங்கள்.**

கங்கை, பக்கம், வண்டு, மண்டபம், மங்கை, வெந்தயம், தந்தம், பஞ்சு, பச்சை, தக்காளி, மஞ்சள், கம்பளம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்.


கங்கை, பக்கம், வண்டு, மண்டபம், மங்கை
வெந்தயம், தந்தம், பஞ்சு, பச்சை, தக்காளி, மஞ்சள்
கம்பளம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்

**ஓ. கீழ்க்காணும் சொற்களுள் அமைந்துள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுங்கள்.**

சங்கு, நுங்கு, பிஞ்சு, வஞ்சம், பண்டம், சுண்டல், வண்டி, பந்தயம், பந்து, கற்கண்டு, தென்றல், நன்று

1. சங்கு – ங்கு
2. நுங்கு – ங்கு
3. பிஞ்சு – ஞ்சு
4. வஞ்சம் – ஞ்ச
5. பட்டணம் – ட்ட
6. சுண்டல் – ண்ட
7. வண்டி – ண்டி
8. பந்தயம் – ந்த
9. பந்து – ந்து
10. கற்கண்டு – ண்டு
11. தென்றல் – ன்ற
12. நன்று – ன்று

**ஓ. பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும்.**

காமராாசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர் . ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராாசர் கவனித்தார் . உடனே அவர்களை உள்ளே அழைத்தார் . “யாரைப் பார்க்க வந்தீங்க?” என்று அன்புடன் வினவினார். “எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மா விடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்…” என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், “அம்மா அனுப்பி விட்டாரா?” என்று காமராாசர் கேட்டார் . ”இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க” என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்ட தும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொ டுத்தார். மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரை த் தேடி வந்தனர். “ஐயா தேர் வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க” என்றனர். அதனைக் கேட்டுக் காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

1. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் --------------

அ) பெற்றோர் **ஆ) சிறுவன், சிறுமி** இ) மக்கள் ஈ) ஆசிரியர்கள்

2. இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக் குகிறது?

அ) ஏழ்மை **ஆ) நேர்மை** இ) உழைப்பு ஈ) கல்லாமை

3. மறுநாள் குழந்தைகள் வந்த தும் காமராசர் மனம் **நெகிழ்ந்தார்.**

**4. சிறுவனும் சிறுமியும் எதற்காகக் காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?**

சிறுவனும் சிறுமியும் தன் அண்ணனுக்குத் தேர்வுக்குக் கட்டணம் கட்டுவதற்குப் பணம் இல்லாததால் பண உதவி கேட்டு காமராசரின் வீட்டிற்கு வந்தனர்.

**5. காமராசர் செய்த உதவி யாது?**

காமராசர் ஏழை மாணவன் ஒருவனுக்குத் தேர்வுக்குக் கட்ட வேண்டிய பணத்தைக் கொடுத்து உதவினார்.

## ஔ. கட்டுரை எழுதுக

**1. காமராசர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

### முன்னுரை :

காமராசர் விருதுநகரில் 1903 ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் தேதி பிறந்தார். அவருடைய பெற்றோர் குமாரசாமி நாடார் மற்றும் சிவகாமி அம்மாள் ஆவர். அவருக்குக் குலதெய்வமான காமாட்சியின் பெயர் சூட்டப்பட்டது. அவருடைய தாயார் 'ராசா' என்று அழைத்தார். நாளடைவில் காமாட்சி என்ற பெயர் மாறி 'காமராசு' என்று ஆனது.

### இளமைக்காலம் :

காமராசர் தனது பள்ளிப் படிப்பைச் சத்ரிய வித்யா சாலா பள்ளியில் தொடங்கினார். அவருக்கு ஆறு வயதிருக்கும் பொழுது அவருடைய தந்தை இறந்ததால் அவரின் தாயாரின் நகைகளை விற்றுக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தன்னுடைய பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதால் தன்னுடைய மாமாவின் துணிக்கடையில் வேலைக்குச் சேர்ந்தார்.

### கல்விப் பணிகள் :

காமராசர் காலத்தில் கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. பள்ளி வேலைநாள்களை நூற்றெண்பதிலிருந்து இருநூறாக உயர்த்தினார். தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் இவரால் தொடங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டு, பள்ளிகளுக்கான அடிப்படைப் பொருள்களும் கருவிகளும் பெறப்பட்டன. உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டது. உடற்பயிற்சிக் கல்லூரிகள் திறக்கப்பட்டன. மருத்துவக் கல்லூரி முதலான தொழிற்கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

KNOWLEDGE IS POWER

**நிறைவேற்றிய பிற திட்டங்கள் :**

நாட்டு முன்னேற்றம், நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றம், கல்வி, தொழில் வளத்துக்கு முன்னுரிமையளித்து பல திட்டங்களை நிறைவேற்றினார். அவரது ஆட்சியில் ஒன்பது முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை பவானித் திட்டம், மேட்டூர் கால்வாய்த் திட்டம், காவேரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம், மணிமுத்தாறு, அமராவதி, வைகை, சாத்தனூர், கிருட்டினகிரி, ஆரணியாறு ஆகியவையாகும்.தொழில் முன்னேற்றத்திற்குக் காமராசர் செய்தவை பாரத மிகு மின் நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், மணலி சென்னை சுத்திகரிப்பு நிலையம், இரயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலை, நீலகிரி புகைப்படச் சுருள் தொழிற்சாலை, கிண்டி மருத்துவ சோதனைக் கருவிகள் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை இவையனைத்தும் காமராசரால் தொடங்கப்பட்டவை ஆகும்.

**முடிவுரை :**

கல்விக் கண் திறந்த காமராசரின் பிறந்த நாளான ஜூலை 15 கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது. ஏழைப் பங்காளராகவும், கர்ம வீரராகவும் தன்னலமற்ற தலைவராகவும் வாழ்ந்தவரின் அடியொற்றி நாமும் நாட்டிற்கு நன்மைகள் செய்வோம்.

## மொழியோடு விளையாடு

**அ. கல்விக்கண் திறந்த காமராசர்' இத்தொடரிலுள்ள எழுத்துகளை மட்டும் பயன்படுத்திப் புதிய சொற்களை உருவாக்குங்கள்.**

(எ.கா.) **கண்**

1. கல்வி
2. கவி
3. கதி
4. ராசர்
5. விண்
6. திற
7. கா
8. வில்
9. கல்
10. திறந்த

**ஆ.முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.**

1. முளையிலே விளையும் தெரியும் பயிர்

   விளையும் பயிர் முளையிலே தெரியும்.

2. ஆக்குவோம் இல்லாமை கல்.

   கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்.

**இ.கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள இன எழுத்துச் சொற்களை வட்ட மிட்டுத் தனியாக எடுத்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ண் | ட | ப | ம் | அ |
| ற | தி | க | ந் | கி | ச |
| கி | பி | ம் | து | ளி | ங் |
| தெ | ன் | ற | ல் | ங் | கு |
| ள் | வி | ம | ஞ் | ச | ள் |

மண்டபம்

பந்து

சங்கு

மஞ்சள்

தென்றல்